**சுருக்கம்**

பணியமைப்பு – பயிற்சி – பேரூராட்சிகளில் பணிபுரிகின்ற தகுதி வாய்ந்த துப்புரவு மேற்பார்வையாளர்கள் / களப்பணியாளர்களுக்கு துப்புரவு ஆய்வாளர் பயிற்சியினை பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை மூலம் வழங்க அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எல்.1) துறை

அரசாணை (ப) எண்.84

நாள்: 23.01.2015
திருவள்ளுவர் ஆண்டு – 2046.
ஜய, தை–09.

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண்.53, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள்: 12.02.2007.
2. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரிடமிருந்து வந்துள்ள கடிதம் ந.க. எண். 45703 / பயிற்சி / எஸ். 2 / நாள். 05.05.2010, 14.3.2012, 5.7.2012, 27.11.2013 மற்றும் 14.02.2014
3. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித ந.க.எண்.3769/ 2009/அ3, நாள் 31.01.2012.

-----

**ஆணை:**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் அவர்களின் கடிதத்தில், பேரூராட்சிகளில் காலியாக உள்ள துப்புரவு ஆய்வாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு பேரூராட்சி துப்புரவு மேற்பார்வையாளர் விதிமுறைகளின்படி நேரடியாக துப்புரவு ஆய்வாளர் பயிற்சி பெற்ற நபர்கள் இல்லை என வேலை வாய்ப்பகம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே தற்போது பேரூராட்சிகளில் பணிபுரிகின்ற தகுதி வாய்ந்த துப்புரவு மேற்பார்வையாளர்கள் / களப்பணியாளர்களுக்கு துப்புரவு ஆய்வாளர் பயிற்சியினை நடத்தும்படி பேரூராட்சிகள் இயக்குநர் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், பேரூராட்சிகளில் பணிபுரிகின்ற தகுதி வாய்ந்த துப்புரவு மேற்பார்வையாளர்கள் / களப்பணியாளர்களுக்கு, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை மூலம் துப்புரவு ஆய்வாளர் பயிற்சியினை வழங்க ஆணை வழங்கும்படி அரசினை கேட்டுக் கொண்டார்.

2. மேற்படி கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, பயிற்சிக்கு செல்ல விருப்பம் தெரிவித்துள்ள 62 தகுதிவாய்ந்த பேரூராட்சி களப் பணியாளர்கள் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர்களுக்கு அவர்களது சொந்த செலவில் ஓராண்டு கால துப்புரவு ஆய்வாளர் பயிற்சியினை, கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையின் கீழ் உள்ள பயிற்சி நிறுவனங்களில் வழங்க அனுமதி அளிக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது:–

(i) பயிற்சியாளர்கள் பள்ளி இறுதி தேர்வு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(ii) பயிற்சியின்போது தங்குமிடம், மற்றும் உணவு ஆகியவற்றை அவர்களது சொந்த செலவிலேயே பார்த்துக் கொள்ள வேண்டும்.

(iii) பயிற்சியாளர்கள் பயிற்சிக் கட்டணமாக ரூ.10,000/– அரசுத் தலைப்பின் கீழ் கட்ட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.ராதாகிருஷ்ணன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை–6.
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை–108.

நகல்:–
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை.9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (அ.வி.III) துறை, சென்னை.9.
நிதித் துறை, சென்னை.9.
மாண்புமிகு அமைச்சர் (மக்கள் நல்வாழ்வு) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவல் பிரிவு) துறை, சென்னை–9.
உதிரி / இருப்பு கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்